[3rd August 1966

கனம் திரு. வெ. ராமைய்யா : நம்முடைய ராஜ்யத்தில் இருக்கக்கூடிய நிலவரத்தைப்பற்றி விவரம் சொல்ல வேண்டுமென்றல் நம் இராஜ்யத்தில் இருக்கக்கூடிய எல்லா மக்களுக்கும் உற்பத்தி ஆகக்கூடிய உணவு பூராவையும் வாங்கிப் பங்கிட்டுக் கொடுக்கவில்லை. சென்னை, கோயம்பத்தூர், நீலகிரி போன்ற இடங்களில் எல்லோருக்கும் உணவு விநியோகம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கிறேம். மற்ற இடங்களில் மார்க்கெட்டபிள் சர்ப்ளஸை வாங்கி, அவர்கள் எவ்வளவு கொடுக்க முடியுமோ அதை வாங்கி, நெல் உற்பத்தி செய்யாத இடங்களில் விநியோகம் செய்து கொண்டிருக்கிறேம். அப்படிப் பார்த்தால், நெல் உற்பத்தியாகக் கூடிய தஞ்சை, தென்ஞற்காடு, வடாற்காடு இது போன்ற ஜில்லாக்களுக்கு நாம் விநியோகம் செய்வது மிகக் குறைவு.

* 52 கேள்வி.—திரு. கரு. சிமைச்சாமி : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழகத்தில் சட்டபூர்வ ரேஷன் எத்தனை மாவட்டங்களில் அமல் செய்யப்படுகிறது?

(இ) அதன் விபரம் என்ன?

THE HON. SRI V. RAMAIAH : (a) & (b) Statutory rationing has been introduced in the City of Madras, in the Municipal Town of Coimbatore and in Singanallur and Perur Panchayat Union areas of Coimbatore District.

* 53 கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ரேஷன் முறை அமலுக்கு வந்ததிலிருந்து சென்னை, கோயம்பத்தூர் ஆகிய இரு நகரங்களுக்கு முறையே தேவையான அரிசி, கோதுமை அளவு என்ன?

(இ) மேற்படி இரு நகரங்களுக்கும் முறையே எத்தனை குடும்பங்களுக்கு ரேஷன் கார்டுகள் வழங்கப்பட்டன?

(உ) ஓட்டல், விடுதிகள், ஆகியவைகளுக்கு எந்த அடிப்படையில் உணவுப் பொருள்கள் வழங்கப்படுகின்றன ?

(எ) ரேஷன் கார்டுகளுக்கு விண்ணப்பம் கோரி வந்த மனுக்களில் இதுவரை பைசலாகாமல் இருப்பவை எத்தனை?

கனம் திரு. வெ. ராமைய்யா :

		சென்னை.	கோயம்பத்தூர்.
(அ) உணவுப் பங்கீடு செயலுக்கு வந்தால், சென்னையிலும், கோயம்பத்தூரிலும் ஒரு வாரத்திற்குத் தேவைப்படும் அரிசி, கோதுமை (டன் அளவில்).	அரிசி	4,181	1,300
	கோதுமை	612	325